செ.வெ.எண்-19 நாள்-08.03.2020

**அரியலூர் மாவட்டத்தில் ரூ.66 இலட்சம் மதிப்பில் திறன் மேம்பாட்டு பயிற்சி மையம் கட்டும் பணிக்கான பூமி பூஜை பணிகளை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.**

அரியலூர் மாவட்டம், திருமானூர் ஒன்றியம், கீழப்பழூர் ஊராட்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் சார்பில் ரூ.66 இலட்சம் மதிப்பில் ஓட்டுநர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி மையம் மற்றும் ஓடுதளம் அமைப்பதற்கான பணிக்கான பூமி பூஜை நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழக அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் பணிகளை இன்று (08.03.2020) பூமி பூஜை செய்து தொடங்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் **திரு.ஜெ.கே.என்.இராமஜெயலிங்கம்** அவர்கள் முன்னிலை வகித்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் போக்குவரத்துறைக்கு பல எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்திவருகிறார்கள். அரியலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துறையின் சார்பில் ரூ.66 இலட்சம் மதிப்பில் ஓட்டுநர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி மையம் மற்றும் ஓடுதளம் அமைப்பதற்கான பணி 6 ஏக்கர் நிலப்பரப்பில் கட்டப்படவுள்ளது. இக்கட்டிடத்தில், புதிய ஓட்டுநர் பயிற்சி மையம், ஓடுதளம் மற்றும் அலுவலக அறை ஆகியவைகள் அமைக்கப்படவுள்ளது. மேலும், புதியதாக பணியில் சேரும் ஓட்டுநர்கள் சிரமமின்றி பயிற்சி எடுப்பதற்கும் இந்த பயிற்சி மையம் வாய்பாக அமையும்.

இந்நிகழ்வின்போது, மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் பொ.சந்திரசேகர், ஒன்றியக்குழுத்தலைவர் செந்தமிழ்செல்வி, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் ம.அன்பழகன், அரசு போக்குவரத்து கழக திருச்சி மண்டல பொது மேலாளர் ராஜ்மோகன், துணை மேலாளர் ஜீலிஸ் அற்புதராயன், கோட்ட மேலாளர் ராமநாதன், கிளை மேலாளர் ராம்குமார், பொறியாளர்கள் சீமான், அன்புசெழியன், ராஜா, மாறன் மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**